ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2025.12.22 |

# மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி (மா.மொ.உ.உ)[1] – 2024

## நாட்டின் பெயரளவு மொ.உ.உற்பத்தியில் மேல் மாகாணம் பாரியளவிலான பங்களிப்பினைத் தொடர்ந்தும் தக்கவைத்திருக்கின்ற வேளையில் வடமேல் மற்றும் மத்திய மாகாணங்கள் முக்கிய பங்களிப்பாளர்களாகத் தொடர்ந்தும் திகழ்கின்றன

நாட்டின் பெயரளவு மொ.உ.உற்பத்தியில் மேல் மாகாணம் முக்கிய பங்களிப்பாளராகத் தொடர்ந்தும் காணப்பட்டு, 2024இல் 42.4 சதவீத பங்கொன்றினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. பணிகள் மற்றும் கைத்தொழில் ஆகிய இரு துறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட வலுவான நடவடிக்கைகளில் மேல் மாகாணத்தின் முக்கியத்துவம் தெளிவாகப் புலப்பட்டது. அதேவேளை, 2024இல் பொருளாதாரத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது உயர்ந்தளவிலான பங்குகளை முறையே வடமேல் (11.5 சதவீதம்) மற்றும் மத்திய (10.7 சதவீதம்) மாகாணங்கள் பதிவுசெய்துள்ளன. மேலும், மத்திய, கிழக்கு, வடமேல், சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலிருந்தான பெயரளவு மொ.உ.உற்பத்திகான பங்களிப்புக்கள் 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் அதிகரித்தன.

**முக்கிய அம்சங்கள்**

*பெயரளவு மொ.உ.உற்பத்தி – 2024*
*ரூ.29, 899 பில்.*

*மொ.மொ.உ.உற்பத்திப் பங்குகள்:*

| | |
|---|---|
| *1ஆவது* | மேல் மாகாணம் **42.4%** |
| *2ஆவது* | வடமேல் மாகாணம் **11.5%** |
| *3ஆவது* | மத்திய மாகாணம் **10.7%** |


### பொருளாதார நடவடிக்கைகளுக்கான மாகாண ரீதியான பங்களிப்பு[2]

வடமேல் மாகாணமானது வேளாண்மை நடவடிக்கைகளில் முன்னணிப் பங்களிப்பாளராகத் தொடர்ந்து காணப்பட்டு, 2024இல் 20.0 சதவீதமாக விளங்கியது. மத்திய மற்றும் தென் மாகாணங்கள் முறையே 13.9 சதவீதம் மற்றும் 11.8 சதவீதப் பங்குகளுடன் அடுத்த மிகவும் உயர்ந்தளவிலான பங்களிப்பாளர்களாகக் காணப்பட்டன.


கைத்தொழில் நடவடிக்கைகளிற்கமைய, மேல் மாகாணம் முக்கிய பங்களிப்பாளராகத் தொடர்ந்தும் காணப்பட்டு, மொத்த கைத்தொழில் பெறுமதியில் 47.6 சதவீதமாக விளங்கியது. வடமேல் (12.0 சதவீதம்) மற்றும் மத்திய (9.6 சதவீதம்) மாகாணங்கள் ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு அதன்பின்னரான முக்கிய பங்களிப்பாளர்களாகத் தொடர்ந்தும் காணப்பட்டன.

அதேவேளை, மேல் மாகாணம் 44.5 சதவீதத்துடன் பணிகள் நடவடிக்கைகளை வழிநடத்தியதுடன் அதனைத்தொடர்ந்து மத்திய (10.7 சதவீதம்) மற்றும் வடமேல் (10.1 சதவீதம்) மாகாணங்கள் காணப்பட்டன.

வரைபடம் 1
மொ.உ.உற்பத்தியின் மாகாண ரீதியாலான பங்குகள் - 2024




வரைபடம் 2
மாகாணங்களிலிருந்தான நடவடிக்கை ரீதியான பங்களிப்பு (%) - **2024**




---

[1] மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியானது 2015 அடிப்படை ஆண்டின் கீழ் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் பெயரளவு மொ.உ.உற்பத்தியினை கூறுகளாக வேறுபடுத்துவதன் மூலம் மேலிருந்து கீழான அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டு வருகின்றது. மாகாணங்களுக்கான மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தியினை மதிப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் ஒவ்வொரு துறை விடயத்தினதும் பெறுமதியானது மாகாண மட்டத்தில் தொடர்புடைய குறிகாட்டிகளைப் பயன்படுத்தி பங்கீடு செய்யப்பட்டது.

[2] 2023 மற்றும் 2024 மாகாண ரீதியான மற்றும் துறைசார் ஒப்பீடுகள் இவ்வெளியீட்டின் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1
நடைமுறைச் சந்தை விலைகளில் மாகாண ரீதியான மொ.உ.உற்பத்தி (அடிப்படை ஆண்டு 2015)

| மாகாணம் | 2023(அ) | | 2024(ஆ) | |
|---|---|---|---|---|
| | பெறுமதி (ரூ.மில்.) | பங்கு (%) | பெறுமதி (ரூ.மில்.) | பங்கு (%) |
| மத்திய | 2,750,177 | 10.0 | 3,202,384 | 10.7 |
| கிழக்கு | 1,292,312 | 4.7 | 1,496,226 | 5.0 |
| வட மத்திய | 1,294,375 | 4.7 | 1,367,650 | 4.6 |
| வடமேல் | 2,989,791 | 10.9 | 3,447,546 | 11.5 |
| வடக்கு | 1,203,489 | 4.4 | 1,321,752 | 4.4 |
| சப்பிரகமுவ | 1,953,942 | 7.1 | 2,288,330 | 7.7 |
| தென் | 2,596,430 | 9.5 | 2,672,395 | 8.9 |
| ஊவா | 1,272,199 | 4.6 | 1,439,464 | 4.8 |
| மேல் | 12,067,090 | 44.0 | 12,662,817 | 42.4 |
| **இலங்கை** | **27,419,804** | **100.0** | **29,898,564** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2
நடைமுறைச் சந்தை விலைகளில் மாகாண ரீதியான மொத்த பெறுமதி சேர்த்தலின் துறைவாரியான உள்ளமைப்பு

| மாகாணம் | வேளாண்மை (%) | | கைத்தொழில் (%) | | பணிகள் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2023(அ) | 2024(ஆ) | 2023(அ) | 2024(ஆ) | 2023(அ) | 2024(ஆ) |
| மத்திய | 12.6 | 13.9 | 9.4 | 9.6 | 9.9 | 10.7 |
| கிழக்கு | 9.8 | 9.6 | 3.5 | 4.3 | 4.6 | 4.7 |
| வட மத்திய | 8.4 | 9.3 | 3.8 | 3.2 | 4.7 | 4.6 |
| வடமேல் | 19.9 | 20.0 | 12.0 | 12.0 | 9.2 | 10.1 |
| வடக்கு | 8.5 | 7.1 | 4.5 | 4.9 | 3.8 | 3.8 |
| சப்பிரகமுவ | 7.8 | 8.9 | 7.4 | 8.0 | 6.9 | 7.3 |
| தென் | 12.6 | 11.8 | 6.8 | 6.7 | 10.2 | 9.5 |
| ஊவா | 8.3 | 8.9 | 3.6 | 3.7 | 4.6 | 4.7 |
| மேல் | 12.2 | 10.5 | 49.0 | 47.6 | 46.0 | 44.5 |
| **இலங்கை** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 3
நடைமுறைச் சந்தை விலைகளில் துறைவாரியான மொத்த பெறுமதி சேர்த்தலின் மாகாண ரீதியான உள்ளமைப்பு

| மாகாணம் | 2023(அ) | | | | 2024(ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வேளாண்மை (%) | கைத்தொழில் (%) | பணிகள் (%) | மொத்த பெறுமதி கூட்டல் (%) | வேளாண்மை (%) | கைத்தொழில் (%) | பணிகள் (%) | மொத்த பெறுமதி கூட்டல் (%) |
| மத்திய | 10.9 | 25.9 | 63.2 | 100.0 | 11.8 | 25.2 | 63.0 | 100.0 |
| கிழக்கு | 17.9 | 20.2 | 61.9 | 100.0 | 17.3 | 23.7 | 59.0 | 100.0 |
| வட மத்திய | 15.2 | 21.7 | 63.1 | 100.0 | 18.3 | 19.5 | 62.2 | 100.0 |
| வடமேல் | 15.8 | 30.3 | 53.9 | 100.0 | 15.8 | 29.1 | 55.2 | 100.0 |
| வடக்கு | 16.8 | 27.9 | 55.3 | 100.0 | 14.6 | 31.1 | 54.3 | 100.0 |
| சப்பிரகமுவ | 9.5 | 28.7 | 61.8 | 100.0 | 10.5 | 29.4 | 60.0 | 100.0 |
| தென் | 11.5 | 19.7 | 68.8 | 100.0 | 12.0 | 20.8 | 67.2 | 100.0 |
| ஊவா | 15.5 | 21.5 | 63.0 | 100.0 | 16.8 | 21.3 | 61.9 | 100.0 |
| மேல் | 2.4 | 30.7 | 66.9 | 100.0 | 2.3 | 31.5 | 66.3 | 100.0 |
| **இலங்கை** | **8.7** | **27.5** | **63.8** | **100.0** | **9.1** | **28.0** | **62.9** | **100.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்